*1*

# ஒரு வேதவசனப் பகுதியை நமது அன்றாட வாழ்வுக்கு நடைமுறைப்படுத்துவது எவ்வாறு

*தொடங்குவதற்கு: வேதவசனம் ஒன்றை நடைமுறைப்படுத்த நாம் முயற்சி செய்கையில், "இந்த வசனப்பகுதி, சமூகம், இல்லம் அல்லது பணி ஆகியவற்றில் நமது நடத்தை பற்றி நமக்குப் போதிக்கிறதா? இது நமது ஒழுக்க மற்றும் நெறிமுறை நடத்தை பற்றி அக்கறை கொண்டுள்ளதா?" என்று நாம் கேட்கவேண்டும்.*

கிறிஸ்தவர்கள், விசுவாசிக்க வேண்டியது என்ன என்பதைக் கண்டறிவதற்கு மாத்திரமல்ல, ஆனால் எவ்வாறு வாழவேண்டும் என்பதைக் கற்றறிவதற்காகவும் வேதாகமத்தை வாசிக்கின்றனர். கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வு மற்றும் ஒழுக்க மற்றும் நெறிமுறை நடத்தையில் வழிகாட்ட நோக்கம் கொண்ட ஒரு தர அளவை வேதாகமத்தில் அடங்கியுள்ளது. அந்தத் தர அளவை எது என்று நாம் எவ்வாறு அறிய முடியும்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தரப்பட்ட வேதாகம போதனைகளை இன்றைய நாட்களில் நாம் எதிர்கொள்ளும் ஒழுக்க நெறிமுறைகளை இன்றைய உலகத்தில் நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும்?

## வேதாகமமும் கிறிஸ்தவ வாழ்வும்

கிறிஸ்தவர்கள், வேதாகமம் கட்டளையிடுகிறபடி வாழவேண்டியவர்களாக உள்ளனர். வேதாகமத்தின் எந்தப் பகுதி? அதன் எல்லாப்பகுதிகளும்! வேதாகமத்தில் உள்ள எல்லாம், கிறிஸ்தவர்களை ஒரேவகையான வழியில் வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை. பழைய ஏற்பாடு நமக்கு நேரடியாக நடைமுறைப்படுவது இல்லை, ஆனால் கிறிஸ்தவ வாழ்வை நடத்த நாம் பிரயாசப்படுகையில் அது (பழைய ஏற்பாடு) நமக்கு இன்னமும் உதவக்கூடும்:

*(1)* பழைய ஏற்பாட்டுப் பிரமாணம், சில ஒழுக்க மற்றும் நெறிமுறைப் பிரச்சனைகளைத் தேவன் எவ்வாறு கண்ணோக்குகிறார் என்பதை விவரிக்கின்றன.

*(2)* பழைய ஏற்பாட்டு வரலாறு, தேவன் மனிதருடன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை விவரிக்கிறது; குறிப்பாக கீழ்ப்படிதலுக்குப் பலனும்

*கீழ்ப்படியாமைக்குத் தண்டனையும் கொடுப்பதன் மூலம் அவர் செயல்படுவதை விவரிக்கிறது.*

*(3) பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் சிலவேளைகளில், தேவன் மீதான விசுவாசம், அவரது மக்களின் வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறது அல்லது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைச் செயல்விளக்கப் படுத்துகின்றனர்.*

*(4) பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியம் உலகளவில் நடைமுறைப் படக்கூடியதாக உள்ளது, அது எல்லாம் அறிந்த, முற்றிலும் பரிசுத்தமான தேவனுடைய பிரசன்னத்தில் ஞானமாக வாழ்வதற்கு மக்களுக்கு வழிகாட்டுதலை அளிக்கிறது.*

*(5) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், அப்போது இருந்த தேவனுடைய மக்களுக்குப் பேசினர், அவர்கள் இன்றைய நாட்களில் அவருடைய மக்களுக்கு அடிக்கடி நடைமுறைப் படக்கூடிய பாடங்களை கொண்டு வந்தனர்.*

*நாம் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பும்போது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது போன்றே, இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கு மற்றும் கிறிஸ்தவர்களுக்காகவே எழுதப்பட்ட புத்தகங்களை வாசிக்கிறோம். ஆகையால் நாம், புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளவை நமக்கு நேரடியாக நடைமுறைப் படக்கூடியவையாக உள்ளன என்று வழக்கமாக யூகிக்க வேண்டும். எப்படி?*

*(1) சுவிசேஷங்கள் இயேசுவின் வரலாற்றை நமக்கு அளிப்பதால், அவைகள் நடைமுறைப்படுபவைகளாக உள்ளன. நாம் அவரது "அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி" (1 பேதுரு 2:21) இருப்பதால், நாம் பின்பற்றுவதற்கு உதாரணங்கள் என்ற வகையில் இயேசுவின் செயல்களை நாம் கண்ணோக்குதல் அவசியமாக உள்ளது.*

*(2) சுவிசேஷங்கள் இயேசுவின் போதனைகளைக் கொண்டுள்ளதாலும் நடைமுறைப் படுபவையாக உள்ளன. அவரது சீஷர்கள் என்ற வகையில் நாம் அவரது போதனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.*

*(3) நடபடிகளின் புத்தகம், சபையானது எவ்வாறு தொடங்கி வளர்ந்தது என்று கூறுவதால், நடைமுறைப் படக்கூடியதாக உள்ளது. மேலும் இது, அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட அப்போஸ்தலர்களால் மேலும் வளர்க்கப்பட்ட இயங்கும் இயக்கம் ஒன்றின் சித்தரிப்பை - மாபெரும் ஊழியத்திற்கு நம்மை ஏவும் ஒரு சித்தரிப்பை - அளிக்கிறது.*

*(4) நிருபங்கள் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டிருந்தன என்பதால் அவைகள் நடைமுறைப் படக்கூடியவையாக உள்ளன. அவைகள் குறிப்பிட்ட சபைக்குழுமங்களின் மற்றும் தனிநபர்களின் பிரச்சனைகளைக் கையாண்டாலும், அவைகள் அளிக்கும் அறிவுறுத்துதல்கள் நமது சூழ்நிலைகளிலும் அடிக்கடி நேரடியாக நடைமுறைப்படுபவையாக உள்ளன.*

*(5) வெளிப்படுத்தின விசேஷம், நிறைவான வெற்றிபற்றிய ஒரு செய்தியை அளித்து, உபத்திரவப் படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி ஊக்குவிக்க எழுதப்பட்டதால், அது இன்றைக்கும் நடைமுறைப் படுவதாக உள்ளது. ஆகையால் இது தேவன் மற்றும் அவரது மக்கள் பெறவிருக்கும் நிறைவான மற்றும் தவிர்க்க இயலாத வெற்றியின்மீது கவனம் குவிக்கும்படி நம்மை ஊக்குவிக்கிறது.*

*எனவே நாம், புதிய ஏற்பாட்டை வாசிக்கையில், நமக்கு*

நடைமுறைப்படுபவற்றை நாம் வாசிக்கிறோம் என்ற யூகத்துடன் அதைத் தொடங்க வேண்டும். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "... நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, ..." என்று கூறப்பட்டதை நாம் வாசிக்கும்போது (ரோமர் 12:1), நாமும் அதையே செய்ய வேண்டும் என்று யூகிக்கிறோம். யாக்கோபு தமது வாசகர்களுக்கு, "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் ..." என்று கூறியதால் (யாக்கோபு. 1:27), நாமும்கூட "திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் அவர்களின் உபத்திரவ காலத்தில் ஆதரிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொள்ளப் படுவதாக நாம் யூகிக்க வேண்டும். இயேசு தமது சீஷர்களுக்கு, "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று கூறியதால் (மத்தேயு 5:16), நாமும்கூட அதேபோல் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று நாம் யூகிக்கிறோம்.

இப்படிப்பட்ட வசனங்கள், நேரடியாக நமக்கு நடைமுறைப் பட்டாலும், பதில் அளிக்க வேண்டிய கேள்விகள் இன்னமும் நமக்கு இருக்கலாம்.

- ரோமர் 12:1ஐப் பொறுத்தமட்டில், நமது சரீரங்களைத் தேவனுக்கு ஜீவபலியாக அளித்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். அந்தக் கேட்டுக்கொள்ளுதலுக்குக் கீழ்ப்படிய நாம் முயற்சி செய்தால், நாம் என்ன செய்வோம்?
- யாக்கோபு 1:27ஐப் பொறுத்தமட்டில், நாம், " 'விசாரித்தல்' என்றால் என்ன?" என்று கேட்கிறோம். "விசாரித்தல்" என்பது யாரிடத்திற்கேனும் சென்று அவர்களின் சுகநலனை விசாரித்தல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்; இது மக்கள்மீதும் அவர்களின் தேவைகளைச் சந்தித்தல் மீதும் கவனம் கொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறது. மற்றும் நாம், திக்கற்ற பிள்ளைகள் மற்றும் விதவைகளின் மீதான நமது அக்கறையை மட்டுப்படுத்திவிடக் கூடாது. அவர்கள் உதவி தேவைப்படும் மக்களாக இருக்க அதிகம் வாய்ப்புள்ளதால் அவர்கள் யாக்கோபினால் குறிப்பிடப் பட்டனர். யாக்கோபு 1:27ஐ நாம், எந்தக் காரணத்திற்காவும் தேவையில் இருக்கும் எவரொருவர் மீதும் அக்கறை கொள்ளும்படி ஊக்குவித்தல் என்ற வகையில் கண்ணோக்க வேண்டும்.
- மத்தேயு 5:16ஐப் பொறுத்தமட்டில், "நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வது எவ்வாறு?" என்ற கேள்வி எழுகிறது. அதே வசனத்தில் இயேசுவே அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்: நற்செயல் களைச் செய்வதினால் நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்கிறோம். இவ்வசனத்தைத் தனிப்பட்ட வகையில் நடைமுறைப் படுத்துவதற்கு நாம், "*எனது* வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு *நான்* செய்யக்கூடிய நற்செயல்கள் யாவை?" என்று கேட்க வேண்டும்.

இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டிய நிலையைக் கொண்டிருத்தலானது, புதிய ஏற்பாட்டில் முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு நடைமுறைப் பட்டது போன்றே நமக்கும் நேரடியாக நடைமுறைப்படும்

அறிவுறுத்துதல்கள் பெரும்பான்மையானவற்றின் சத்தியத்தை ஒன்றும் இல்லாது போகச்செய்வது இல்லை. முதல் வாசகர்கள் தங்களுக்குத் தாங்களே இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு பதிலை நாடுவதைச் செய்ய வேண்டியிருந்திருக்கும்.

வேதவசனம் தன்னிலேயே, அது நமக்கு நேரடியாக நடைமுறைப் படாதிருக்கக் காரணம் ஒன்றைக் கருத்தாகத் தெரிவித்தால், அதை நடைமுறைப் படுத்துவதற்கான இன்னொரு வழியை நாம் நாட வேண்டும். சில வேளைகளில் புதிய ஏற்பாடு, தனிநபர்களுக்குத் தரப்பட்டதும் ஒவ்வொருவருக்கும் நடைமுறைப்படுவதை நோக்கங்கொண்டிராததுமான அறிவுறுத்துதல்களைக் கொண்டுள்ளது. சிலவேளைகளில் நாம், நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளப் படுவதை நோக்கங்கொண்டிராத, உருவக நடையில் விளக்கப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களைக் காணுகிறோம். புதிய ஏற்பாட்டில் உள்ள சில அறிவுறுத்தல்கள், இனியும் நடைமுறையில் இல்லாத, பழங்காலப் பழக்க வழக்கங்களைப் பிரதிபலிக்கின்றன.

இப்படிப்பட்ட விஷயங்களில் கிறிஸ்தவர்கள், “இந்த அறிவுறுத்தல்களுக்குப் பின்னால், உலகளாவிய வகையில் நடைமுறைப்படும் கிறிஸ்தவக் கொள்கைகள் சில உள்ளனவா?” என்று கேட்பதன் மூலம் அவ்வசனப் பகுதியை நடைமுறைப் படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, இன்றைய நாட்களில் பல நாடுகளில், மக்கள் ஒருவரை ஒருவர் முத்தம் கொடுத்து வாழ்த்துதல் என்பது வழக்கத்தில் இல்லை. அப்படி என்றால், “ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்” என்று கூறுகிற வசனப்பகுதியை (ரோமர் 16:16 போன்றவற்றை) நாம் எவ்வாறு நடைமுறைப் படுத்துகிறோம்? நமது கலாச்சாரத்தில் வழக்கமானதாக உள்ள வாழ்த்துதலின் வகைகொண்டு ஒருவரை ஒருவர் இதமாக வாழ்த்துவதின் மூலம் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும்.

இருப்பினும், காலங்களினூடே நிகழும் கலாச்சார மாற்றங்கள், வேதவசனங்களுக்கான நமது விளக்கம் அளித்தல் மீது அவசியமாகச் செயல் விளைவை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் யூகிக்க முடியாது. உதாரணமாக, இன்றைய நாட்களில் அமெரிக்காவிலும் மற்றும் சில நாடுகளிலும், திருமணம் செய்துகொள்ளாமலேயே ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழுதல் என்பது சாதாரணமானதாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு நடைமுறையை, சமூகம் கண்டனம் செய்யாதிருந்தாலும், வேதாகமம் அதைக் கண்டனம் செய்கிறது! கலாச்சார மாற்றம் என்பது தவறான ஒரு நடைமுறையைச் சரியாக்கி விடுவது இல்லை. அவ்வாறே பலநாடுகளில் சமீபத்தில் பெண்களின் உரிமைகள் மீதான வலியுறுத்தமானது, கணவர் மனைவிக்குத் தலையாக இருக்கிறார் மற்றும் சபைகூடிவரும்போது பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்ற புதிய ஏற்பாட்டின் போதனைகளை, மக்களில் சிலர் புறக்கணிக்கக் காரணமாகிறது. இப்படிப்பட்ட போதனைகள் காலத்திற்கு ஏற்றவை அல்ல என்று அவர்கள் நினைக்கின்றனர். இதற்கு நேரெதிராக, புதிய ஏற்பாடானது, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இல்லத்திலும் சபையிலும் பெண்களின் பணிப்பொறுப்பு பற்றிப் போதித்த அதே விஷயத்தையே இன்றைக்கும் தொடர்ந்து போதிக்கிறது. வேதாகமம் தெளிவாகப் போதிக்கும் விஷயத்தைக் கிறிஸ்தவர்கள் புறக்கணிப்பதற்கு, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உள்ள உறவில் மாற்றங்களாக இன்றைய நாட்களில் மக்கள் காண்பவை, போதுமான

*காரணங்களாக இருப்பதில்லை.*

*அப்படியென்றால் நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு, வேதாகமத்தை விசேஷமாகப் புதிய ஏற்பாட்டை எவ்வாறு நடைமுறைப் படுத்துகிறோம்? முதன்மையில், நாம் வாசிப்பவற்றில் பெரும்பான்மையானவை நமக்கு நேரடியாக நடைமுறைப் படுகின்றன என்று யூகித்தலினால் இதைச் செய்கிறோம். நாம், "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" என்று வாசிக்கும்போது (எபேசியர் 5:25), நாம் யாவரும் "நான் இப்படிப்பட்ட அன்பை எவ்வாறு வெளிக்காண்பிக்கிறேன்?" என்று கேட்டுக்கொள்வது அவசியமாக உள்ளது. நாம், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து" என்று வாசிக்கும்போது (எபேசியர் 4:32அ), நாம் "தயவு என்றால் என்ன, மற்றும் நான் எவ்வாறு பிறருக்கு தயவை காண்பிக்கிறேன்?" என்று கேட்டுக் கொள்கிறோம். இப்படிப்பட்ட வசனங்களுக்குப் பின்வரும் பழங்கூற்று உண்மையானதாக உள்ளது: "அதற்கு விளக்கம் அளித்தல் தேவையில்லை; அதற்கு நடைமுறைப்படுத்துதலே தேவைப்படுகிறது!"*

## வேதாகமமும் ஒழுக்கங்களும்

*வேதாகமத்தை நாம் நமது அன்றாட வாழ்விற்கு நடைமுறைப் படுத்துகையில், "ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த விஷயங்களுக்கு வேதவாக்கியங்களை நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும்?" என்பது பதில் அளிக்க வேண்டிய இன்னொரு கேள்வியாக உள்ளது. பின்வரும் உண்மைகளின் நிச்சயத்தினால், அந்தக் கேள்விக்குப் பதிலானது தெளிவானதாகவோ அல்லது சுலபமானதாகவோ இருப்பதில்லை என்பது தெளிவாகக் காணப்படுகிறது: (1) வேதாகமத்தை விசுவாசிப்பதாக அறிக்கை செய்யும் சிலர், இன்றைய நாட்களின் சமூகத்திற்கு நடைமுறைப்படக் கூடிய முற்றான ஒழுக்க முறைமைகள் எதுவும் இருப்பதில்லை என்று முடிவு செய்கின்றனர். (2) வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் அறியப்படாது இருந்த ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த பிரச்சனைகள் நவீன உலகத்தில் எழுந்துள்ளன. உதாரணமாக, மனிதர்களை குளோனிங் முறைக்கு உட்படுத்துதல் சரியானதா அல்லது தவறானதா என்பது பற்றிப் பவுல் எதுவும் கூறவில்லை. (3) வேதாகமத்தை விசுவாசிக்கும் பலர், ஒழுக்கரீதியான விஷயங்கள் பற்றி வேதாகமம் கேட்டுகொள்பவற்றில் - "தகுதியான உடைகள்" என்பதில் அடங்கி இருப்பவை யாவை என்பது போன்ற விஷயங்களில் (1 தீமோத்தேயு 2:9) - கருத்து வேறுபடுகின்றனர். (4) சில வேதாகம வேண்டுகோள்கள் - "உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு" (மத்தேயு 5:29) போன்றவை - புரிந்துகொள்வதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் கடினமானவைகளாக உள்ளன.*

*இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் இந்த சிரமங்கள் இருந்தாலும், நம்மை எதிர்கொள்ளும் ஒழுக்கம் பற்றிய கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டறிவது எவ்வாறு? தூய மற்றும் பரிசுத்த வாழ்வை நாம் வாழ்வதற்கு வேதாகம போதனைகளை நடைமுறைப்படுத்துவதில் நம்மை ஆளுகை செய்ய வேண்டிய வழிகாட்டுதல்கள் யாவை?*

***தேவன் நமக்கு நியமித்துள்ள ஒழுக்க தரஅளவை வேதாகமத்தில் காணப்படுகிறது***

வேதாகமம் மனிதரை "எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாக"ச் செய்வதால் (2 தீமோத்தேயு 3:16, 17), வேதாகமத்தை விசுவாசிக்கும் நாம், ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த கேள்விகள் பற்றிய வழிகாட்டுதல்களுக்குத் தேவனுடைய வசனத்தையே கண்ணோக்குகிறோம். வேதாகமத்தின் எந்தப் பகுதியில் இன்றைய நாட்களில் நமக்கான ஒழுக்கரீதியான அறிவுறுத்துதல்கள் அடங்கி இருக்கின்றன?

*பழைய ஏற்பாடும் கிறிஸ்தவரும்.* பழைய உடன்படிக்கை நீக்கப்பட்டிருப்பதால் (காண்க எபேசியர் 2:15), பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் இன்றைய நாட்களில் நேரடியாக நடைமுறைப்படுவதில்லை என்பதை நாம் நினைவில் வைத்தல் அவசியமாக உள்ளது. இருப்பினும், புதிய உடன்படிக்கையின் ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த பிரமாணங்கள், பழைய ஏற்பாட்டில் உள்ள அத்தகைய பிரமாணங்களில் இருந்து பெரிதும் மாறுபட்டிருப்பதில்லை. மோசேயின் பிரமாணங்கள் ஒரு செயலைக் குறிப்பாக ஒழுக்கவீனமானது என்று கண்டனம் செய்யுமேயானால், அப்படிப்பட்ட செயல்களை இன்னமும் ஒழுக்கவீனமானவை என்றே தேவன் கருதுகிறார் என்று நாம் பாதுகாப்பாக யூகம் செய்யலாம்.

மற்றும் புதிய ஏற்பாடு, நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது (ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11). இருந்தாலும் பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களின் செயல்களில் இருந்து ஒழுக்கரீதியான பாடங்களைத் தரவழைப்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வழக்கமாக பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்புகள், நாடகத்துவமாக வேதாகம வரலாற்றில் வரும் நடிகர்கள் போன்ற பாத்திரங்கள் செய்தவை நல்லதா மோசமானதா என்று குறிப்பிடாமலேயே அவர்கள் என்ன செய்தனர் என்பதைக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக நாம், வஸ்தி அல்லது எஸ்தர் என்ற பெண்களை (எஸ்தர் புத்தகத்தில் உள்ளவர்கள்), இன்றைய நாட்களின் இளம் பெண்களுக்கு நல்லதொரு ஒழுக்கரீதியான உதாரணங்கள் என்ற வகையில் பயன்படுத்துவதற்கு முன்னர் நிதானிக்க வேண்டும். பொதுவாக, பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களின் செயல்கள், எந்தப் பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தார்களோ அந்தப் பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்பட வேண்டும். சோதனையில் தேறிய செயல்பாடுகள் பின்பு, புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தினால் கேட்டுக் கொள்ளப்படும் நெறிமுறைகளை விவரிப்பதற்கு நல்ல உதாரணங்கள் என்ற வகையில் பயன்படுத்தப்படமுடியும்.

ஏவுதல் பெற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் ஒருவர், கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதை நிரூபிக்கப் பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் அல்லது நிகழ்ச்சி ஒன்றைப் பயன்படுத்தினார் என்றால், அந்தப் பழைய ஏற்பாட்டு நடைமுறைப்பயன்பாடு இன்றைய நாட்களில் அதே தரஅளவையைக் கேட்டுக்கொள்கிறது என்று கூறி அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். இல்லையென்றால், பழைய ஏற்பாட்டில் உள்ள எதுவும் இன்றைய நாட்களின் மக்கள் மீது கட்டப்படுவது இல்லை.

*புதிய ஏற்பாடும் கிறிஸ்தவரும்.* இதற்கு மறுபுறத்தில், தேவனை எவ்வாறு பிரியப்படுத்துவது என்று கிறிஸ்தவர்களுக்குப் போதிப்பதற்காகப் புதிய ஏற்பாடு அதன் முழுமைத்தன்மையுடன் தரப்பட்டது. இதன் விளைவாக,

புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதியும், நமது அன்றாட வாழ்வில் நாம் எவ்வாறு நடந்துகொள்வது என்று நமக்குப் போதிக்கும் பாடக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுவின் வரலாறு மாத்திரமல்ல, ஆனால் அவரது போதனைகள் பற்றிய பதிவும் அடங்கியுள்ளது. இந்த விபரங்கள் சபை உறுப்பினர்களால் எழுதப்பட்டு தொடக்ககால சபைகளில் தரப்பட்டு வாசிக்கப்பட்டன. கிறிஸ்துவின் சீஷர்கள் எவ்வாறு வாழவேண்டும் மற்றும் தங்கள் எஜமானரை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று போதிப்பதை நோக்கங்கொண்டிருந்தன என்பதில் சந்தேகம் இல்லை.

நடபடிகளின் புத்தகம், ஒழுக்கரீதியான அறிவுறுத்துதல்களின் வழியில் சிறிதளவே கருத்துக்களை கொண்டுள்ளது, ஆனால் இது ஆதிகிறிஸ்தவர்களின் அர்ப்பணிப்பு பற்றிய ஒரு சித்திரத்தைத் தீட்டுகிறது. இப்படிப்பட்ட நடக்கையானது கர்த்தருடைய சபையின் பிற்கால சந்ததிகளுக்கு விதிமாதிரி என்ற வகையில் இருப்பதை நோக்கங்கொண்டிருக்கலாம். நிருபங்கள், கர்த்தருக்கு முன்பாக விசுவாசம் நிறைந்த வாழ்வை வாழ்வதற்குக் கிறிஸ்தவர்களுக்கு உதவும்படி குறிப்பாக எழுதப்பட்டன. இவற்றில் ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த போதனை ஏராளமாக அடங்கியுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம்கூட ஒழுக்கவீனத்திற்கு எதிராக எச்சரிக்கிறது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:8). இதன் விளைவாக, ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த நடத்தை பற்றித் தேவன் கிறிஸ்தவரிடம் கேட்டுக்கொள்வது என்ன என்று நாம் அறிய விரும்பினால், நாம் புதிய ஏற்பாடு முழுவதையும் வாசிக்கவும் படிக்கவும் முடியும் (மற்றும் வேண்டும்).

### தேவனுடைய தர அளவை முற்றான முழுமைகளில் வேர்கொண்டுள்ளது

ஒழுக்கம் சார்ந்த நிலையில் சார்பளவு கொள்கையாளர்கள் (இடத்திற்கு இடம் மற்றும் காலத்திற்குக் காலம் ஒழுக்க தர அளவை மாறுபடுகிறது என்ற கொள்கை உடையவர்கள்), முற்றான முழுமை மற்றும் எல்லா வேளைகளிலும் நிச்சயமாகவே தவறானது என்று எதுவும் இருப்பதில்லை என நம்புகின்றனர். ஒரு விஷயம் சரியானதா அல்லது தவறானதா என்பது சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். பல விஷயங்களில், விபசாரம் தவறானது என்று அவர்கள் ஒப்புக்கொள்ளலாம், ஆனால் அது நியாயப்படுத்தப்படக் கூடியது, ஆகையால் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அது தவறானதல்ல என்று அவர்கள் உரிமை கோருகின்றனர். பொய்கூறுதல் அல்லது கொலை செய்தல் தவறானதா என்பது, ஒரு நபர் பொய்கூறிய அல்லது கொலைசெய்த சூழ்நிலைகளையே முற்றிலும் சார்ந்துள்ளது என்று அவர்கள் விவாதம் செய்வார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் முற்றான முழுமைகள் எதுவும் இருப்பதில்லை.[1]

காலங்களும் பழக்கவழக்கங்களும் மாறுகின்றன என்பது இந்தக் கண்ணோட்டங்களை ஆதரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு விவாதமாக உள்ளது; தேவனுடைய பிரமாணமும் மாற்றப்பட வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். தேவனுடைய பிரமாணங்களை நடைமுறைப் படுத்தும்போது அவர்கள், நாம் வாழும் புதிய உலகத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இன்றைய நாட்களில் மக்களுக்கு வினோதமாகத் தோற்றும் பிரமாணங்களை மதிக்காது விட்டுவிடுகின்றனர்.

பழக்க வழக்கங்கள் மாறுதல் என்பது தேவனுடைய

வசனத்தின் நடைமுறைப் பயன்பாட்டின் மீது செயல்விளைவை ஏற்படுத்தலாம் என்றிருக்கையில், ஒழுக்கரீதியான முற்றான முழுமைகள் சில உள்ளன என்ற புரிந்துகொள்ளுதலுடன் நாம், தேவனுடைய ஒழுக்கரீதியான பிரமாணங்களைப் பற்றிய நமது ஆழ்ந்த சிந்தனையைத் தொடங்க வேண்டும். நாம், வேதாகமத்தை நமது வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டால், *சில விஷயங்கள்* - கலாச்சாரம், இடம் அல்லது காலம் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பாட்டாலும் - *எப்போதும் தவறானவைகளாகவே உள்ளன* என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்! கொலை செய்தல், பொய் கூறுதல், களவு செய்தல் மற்றும் விபசாரம் செய்தல் ஆகியவை எப்போதுமே தவறானவைகளாகவே இருந்துள்ளன; இப்படிப்பட்ட செயல்களைச் செய்தல் இன்னமும் தவறானதாகவே உள்ளது.

ஒழுக்கரீதியான முற்றான முழுமை என்பதற்கு உதாரணம் என்ற வகையில், ஓரினச் சேர்க்கை என்ற நடக்கை பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். சமீபகாலங்களில் பலர், ஓரினச் சேர்க்கையை மாற்று வாழ்வு நடத்தை என்ற வகையில் சட்டபூர்வமாக்க வேண்டும் என்று விவாதித்துள்ளனர் (மற்றும் இவர்கள் இந்த நடைமுறைக்கு எதிராகப் போதிப்பவர்களை "ஓரின[சேர்க்கை பற்றிய] பயம் கொண்டவர்கள்" மற்றும் "[மத] வெறியர்கள்" என்று தாக்கிப் பேசியுள்ளனர்), (ஆனாலும்) ஓரினச் சேர்க்கை பாவமாக உள்ளது என்று வேதாகமம் சீர்பொருத்தமாக போதிக்கிறது (லேவியராகமம் 18:22; 20:13; ரோமர் 1:26, 27).[2] ஓரினச்சேர்க்கை என்பது விபசாரம் அல்லது வேசித்தனம் போன்ற மற்ற பாவங்களை விட மோசமானது அல்ல என்று கிறிஸ்தவர்கள் விவாதிக்கக் கூடும். மேலும், ஓரினச் சேர்க்கைக் காரர்கள் உட்பட எல்லாப் பாவிகளும் (அவர்களின் பாவங்கள் கண்டனம் செய்யப்பட வேண்டும் என்றாலும்), வெறுக்கப்படுவதற்குப் பதிலாக அன்புகூரப்பட வேண்டும் என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இருந்தாலும் நாம் வேதாகமத்தை நம்புவதால், ஓரினச் சேர்க்கையை நடப்பித்தல் பாவம் நிறைந்ததாக உள்ளது என்ற வேதாகமத்தின் எளிய போதனையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

### தேவனுடைய ஒழுக்க தர அளவையானது அவரது வசனத்திலிருந்து வரும் கொள்கைகளின் நடைமுறைப் பயன்பாட்டைக் கேட்டுக்கொள்கிறது

சில நடைமுறைகளைப் பொறுத்த மட்டில், "அது பாவம் நிறைந்தது என்று வேதாகமம் தெளிவாகப் போதிப்பதால், அது தவறானதாக உள்ளது" என்று நாம் தயக்கமின்றி கூற முடியும். இருப்பினும் ஒழுக்கரீதியான அல்லது நெறிமுறை சார்ந்த எல்லாக் கேள்விகளும் அவ்வளவு சுலபமாகக் கையாளப்பட முடியாது. ஏன்?

வேதாகமம், சூழ்நிலைகளைப் பொறுத்துத் தருகிற அறிவுறுத்துதல்கள் இனியும் நிலவுவது இல்லை என்பது ஒரு அறைகூவலாக உள்ளது. அடிமைகளை ஆளுதல் மற்றும் அடிமை எஜமானர்கள் பற்றிப் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள பிரமாணங்கள் இந்தக் காலத்திற்கு ஒவ்வாதவைகளும் பழையவைகளுமாகக் காணப்படுகின்றன. அடிமைத்தனம் இனியும் நிலவாத இடங்களில் இப்படிப்பட்ட பிரமாணங்கள் எவ்வாறு நடைமுறைப்படும்? மீண்டுமாக, வேதாகமம் நேரடியாகப் பேசியிராத ஒழுக்கரீதியான கேள்விகள் இன்றைய நாட்களில் எழுகின்றன. சூதாட்டம் பற்றிய விஷயம் என்ன?

வேதாகமத்தில் குறிப்பாக எந்த வசனமும் சூதாட்டத்தைக் கண்டனம் செய்வதில்லை. ஆகையால் சூதாட்டம் தேவனுக்கு ஏற்புடையது என்று நாம் முடிவு செய்ய வேண்டுமா? இத்துடன் கூடுதலாக நவீனத் தொழில் நுட்பம், வேதவசனங்களினால் குறிப்பாகப் பதில் அளிக்கப் பட்டிராத கேள்விகளை எழுப்புகிறது. (1) வேதாகமம் போர் நடத்துவதைக் குறிப்பாகக் கண்டனம் செய்வதில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள், அணுக்கரு யுத்தம் அல்லது நகரங்களைக் குண்டு போட்டுத் தாக்குதல் ஆகியவற்றைத் தவறானது என்று எண்ண வேண்டுமா? (2) கொலை செய்தல் தவறானதாக உள்ளது, ஆனால் மருத்துவ ஆராய்ச்சியின் நோக்கத்திற்காக மனிதக் கருக்களை அழித்தல் தவறானதா? (3) மனிதர்கள் குளோன் செய்யப்பட்டால், அது தவறானதாக இருக்குமா? (4) வாகனங்கள், கணணிகள் மற்றும் இணையதளம் ஆகியவை, ஒழுக்கரீதியான அல்லது நெறிமுறை சார்ந்த கேள்விகளை எழுப்புகின்றனவா? ஆம் என்றால், அந்தப் பிரச்சனைகள் எவ்வாறு தீர்த்துவைக்கப் படமுடியும்?

இப்படிப்பட்ட கேள்விகளுக்கு வேதாகமம் நேரடியாகப் பதில் உரைப்பதில்லை என்பதால், இப்படிப்பட்ட விஷயங்களைக் கையாள்வதற்கு வேதாகமத்தில் உள்ள *கொள்கைகளை* நாடுவதற்கு, வழிகாட்டுதலுக்காகத் தேவனுடைய வசனத்தைக் கண்ணோக்குதல் என்பதே கிறிஸ்தவர்களுக்கு உள்ள ஒரே தீர்வாக இருக்கிறது.

நாம் வேதவாக்கியங்களைப் படிக்கும்போது, *தெளிவான கூற்றுக்களைப் பற்றி மாத்திரம் அல்ல, ஆனால் அந்தக் கூற்றுக்களுக்குப் பின்னால் இருக்கும் கொள்கைகளைப் பற்றியும் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.* இந்தச் செயல்முறையானது பல வழிகளில் நமக்கு, ஒழுக்கரீதியான கேள்விகளுக்கு வேதாகமப் போதனையை நடைமுறைப் படுத்த உதவும்.

*முதலாவது, வேதாகமரீதியான கொள்கைகளைப் பற்றி அக்கறை கொண்டிருத்தல் என்பது, வேறுவகையில் பிரச்சனைக்குரியதாக உள்ள போதனைகளை நடைமுறைப்படுத்த நமக்கு உதவும்.* இடர்ப்பாட்டிற்குக் காரணமாகும் கண்ணைப் பிடுங்கி எறிய வேண்டும் அல்லது கையை வெட்டிவிட வேண்டும் என்று இயேசு கூறியிருந்தாலும் (மத்தேயு 5:29, 30; மாற்கு 9:43-48), இந்த வார்த்தைகள் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதை ஒவ்வொருவரும் மெய்யாகவே புரிந்துகொள்கிறோம். மாறாக உயர்வுநவிற்சியணியைப் பயன்படுத்தியது மூலம் அவர், ஒரு கொள்கையைப் போதித்தார்: ஏதேனும் ஒருவிஷயம், நாம் பாவம் செய்யக் காரணமாக உள்ளது என்றால் - அது நமக்கு எவ்வளவு பிரியமானதாக இருந்தாலும் - நாம் அதை விட்டு ஒழிக்க வேண்டும்! அந்தக் கொள்கை, காமத்தின் பிரச்சனைக்கு மாத்திரம் அல்ல, ஆனால் கிறிஸ்தவர் பாவம் செய்யத் தூண்டப்படக்கூடிய எந்த சூழ்நிலைக்கும் நடைமுறைப்படுத்தப் படமுடியும். அதுபோன்றே இயேசு, “ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ” என்று கூறிபோது (மத்தேயு 5:41), கிறிஸ்தவர்களுக்கு அவர் ஒரு கொள்கையை நிலைநாட்டினார்: நாம் சிலவற்றைச் செய்யக் கடமைப் பட்டிருக்கும்போது, அதை நாம் செய்தாக வேண்டும்; மற்றும் நம்மிடத்தில் கேட்டுக்கொள்ளப் பட்டவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றையும் செய்ய நாம் மனவிருப்பமாக இருக்க வேண்டும். அதுபோன்றே, “இராயனுடையதை

இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்'' என்ற இயேசுவின் வார்த்தைகள் (மத்தேயு 22:21), தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பின்பற்றப்பட்ட ஒரு கொள்கையை நிலைநாட்டியது: ஆளுகிற அதிகாரிகளுக்கு நாம் கனம்கொடுத்து நமது வரிகளை நாம் செலுத்த வேண்டும்.[3]

*இரண்டாவது, வேதாகமரீதியான கொள்கைகளைப் புரிந்து கொள்ளுதலானது வேதாகமத்தில் குறிப்பாகக் கலந்துரையாடப் பட்டிராத ஒழுக்கரீதியான கொள்கைகளைக் கையாள்வதில் நமக்கு உதவும்.* சூதாட்டம் என்பது வேதாகமத்தில் குறிப்பாகக் கண்டனம் செய்யப்படாதிருக்கலாம், ஆனால் சூதாட்டம் என்பது வேதாகமத்தின் குறிப்பிட்ட சில கொள்கைகளை மீறுகிறது என்பதை நாம் குறிப்பிட முடியும்: (1) சூதாட்டம் ஆடுபவர், வேலை எதுவும் செய்யாமல் பணம் ஈட்டலாம் என்று நம்பிக்கையாக இருப்பதால், ஒரு நபர் வாழ்வதற்கு அவர் வேலை செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்ற கொள்கையை இது (சூதாட்டம்) மீறுவதாக உள்ளது. (2) சூதாடுபவர் எதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளச் சாத்தியமற்ற நிலையில், மதிப்பு மிக்க சிலவற்றை இடர்ப்பாட்டிற்கு ஏதுவான வகையில் வைத்து ஆடுவதால், சூதாட்டம் என்பது உக்கிராணத்துவத்தின் கொள்கையை மீறுகிறது. (3) சூதாடுபவர் வெற்றிபெறும்போது, மற்றவர்கள் பணத்தை இழந்து போவார்கள், அவர்களின் செலவில் தாம் ஆதாயம் பெறலாம் என்று நம்பிக்கையாக இருப்பதால், சூதாட்டம் என்பது, மனிதர் தம்மீது அன்புகூருவது போன்றே அயலார் மீதும் அன்புகூர வேண்டும் என்ற கொள்கையை மீறுகிறது.

*மூன்றாவது, வேதாகமத்தில் காணப்படும் கொள்கைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது, நவீன தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஒழுக்கரீதியான கேள்விகளுக்குப் பதில் அளிக்க நமக்கு உதவக்கூடும்.* கிறிஸ்தவர் ஒரு வாகனத்தை ஓட்டுவது எவ்வாறு என்பது பற்றி வேதாகமம் ஏதாவது கூறுகிறதா? வாகனம் ஓட்டுதலில் வேதாகமத்தின் பல்வேறு கொள்கைகள் நடைமுறைப் படுகின்றன: (1) கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (2) நாம் மற்றவர்கள் மீது கொண்டுள்ள அன்பைச் செயல்விளக்கப் படுத்த வேண்டும்; ஆகையால் நாம், சீர்பொருத்தமற்ற வகையில், முரட்டுத்தனமாக, சுயநல நடத்தையுடன் வாகனம் ஓட்டக்கூடாது. (3) மனித உயிரை நாம் மதிக்க வேண்டும்; ஆகையால் நமக்கோ அல்லது பிறருக்கோ அபாயம் விளைவிக்கும் வகையில், அசட்டையாக வாகனத்தை ஓட்ட முடியாது. அவ்வாறே நாம், கருக்கலைப்பு, கருணைக்கொலை, ஆராய்ச்சிக்காக கருப்பைத் தண்டு செல்களைப் பயன்படுத்துதல் மற்றும் குளோனிங் ஆகியவை பற்றிய கேள்விகளை, மனித உயிரின் தனிச்சிறந்த மதிப்பு பற்றிய கொள்கையின் மீது கையாள முடியும்.

*நான்காவது, வேதாகமக் கொள்கைகள் மீது அக்கறை கொண்டிருத்தலானது, பழக்கவழக்கங்கள் மாறும்போது ஒழுக்கரீதியான முடிவுகளை மேற்கொள்வதில் நமக்கு உதவும்.* வேதாகமக் கொள்கைகள் எல்லா இடங்களிலும் மற்றும் எல்லாக் காலங்களிலும் மாறாதிருக்கின்றன, ஆனால் பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சாரங்கள் இடத்திற்கு இடம் மற்றும் காலத்திற்குக் காலம் மாறுகின்றன. குறிப்பிட்ட சில கொள்கைகளின் நடைமுறைப் பயன்பாடு, சூழ்நிலைகளின் மாற்றத்திற்கு ஏற்பத் தழுவியமைக்கப்பட வேண்டும். முதல் நூற்றாண்டில் பெண்கள் "தகுதியான வஸ்திரம்'' (1 தீமோத்தேயு 2:9) உடுத்திக் கொள்ள

வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது, ஆனால் "தகுதியான" என்பது இடத்திற்கு இடம் மற்றும் காலத்திற்குக் காலம் மாறுகிறது. அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் உலகப்பிரகாரமான இயல்பைத் தவிர்க்க வேண்டும் (ரோமர் 12:1, 2; யாக்கோபு 1:27ஆ), ஆனால் உலகப்பிரகாரமான இயல்பு என்று கருதப்படுவது, ஒவ்வொரு கலாச்சாரத்திலும் ஒரேமாதிரி இருப்பதில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சீட்டு விளையாடுதல் மற்றும் திரைப்படங்களுக்குச் செல்லுதல் என்பவை அமெரிக்காவில் உலகப்பிரகாரமான இயல்பாகக் கருதப்பட்டன; இன்றைய நாட்களில் மக்களில் சிலரே இவற்றை உலகப்பிரகாரமான இயல்பாகக் கருதுகின்றனர்.[4] கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரத்தில் நல்ல செல்வாக்கைச் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும், தங்கள் "வெளிச்சத்தை" மனிதர் முன்பாகப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் (மத்தேயு 5:14-16) என்றிருக்கையில், நமது செல்வாக்கைச் சேதப்படுத்துகிறவை என்னவாக இருக்கலாம் என்பது நமது சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடும்.

கிறிஸ்தவர்கள், மாறுபடும் கலாச்சாரங்களை எதிர்கொள்ளும்போது, வேதாகமத்தில் கூறப்படாத ''சட்டங்களை'' பிடிவாதமாகப் பற்றிக்கொண்டிருக்கத் தேவையில்லை. நாம் செயல்விளைவில், "எனது வழக்கமான சட்டங்கள் இனியும் நடைமுறைப்படுவதோ அல்லது அமுல்படுத்தமுடிவதோ இல்லை என்பதால், நான் எந்த சட்டங்களின்படியும் வாழவேண்டியதில்லை!" என்று கூறி நாம் எல்லாக் கட்டுப்பாடுகளையும் தூக்கி எறியவும் முடியாது. மாறாக நாம் "இந்த வேளையில் இந்தக் கலாச்சாரத்தில் இந்தச் சூழ்நிலைக்கு நடைமுறைப்படக்கூடிய வேதாகமரீதியான கொள்கைகள் யாவை'' மற்றும் "அவைகள் என்னிடத்தில் கேட்டுக்கொள்வது என்ன?'' என்று கேட்க முடியும் மற்றும் கேட்க வேண்டும். பின்பு நாம், அந்தக் கொள்கைகளின்படி வாழத் தீர்மானிக்க முடியும். கலாச்சாரங்கள் மாறுகின்றன, ஆனால் வேதாகமரீதியான கொள்கைகள் ஒருக்காலும் மாறுவது இல்லை. மனச்சான்று உள்ள கிறிஸ்தவர்கள், தற்போதய சூழ்நிலைகளுக்கு அந்தக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துதல் பற்றி எப்போதுமே அக்கறையாக இருப்பார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் மக்களால் உலகப்பிரகாரமானதாகக் கருதப்பட்டது எது?" என்று நாம் கேட்பது இல்லை, மாறாக நாம், "இன்றைய நாட்களில் உலகப்பிரகாரமானது என்று மதிக்கப்பட வேண்டியது என்ன? அது என்னவாக இருந்தாலும் நான் அதைத் தவிர்க்க வேண்டும்" என்றே கூறுகிறோம்.

*ஐந்தாவது, வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள உறவுமுறைகள் இன்றைய நாட்களின் உலகத்தில் காணப்படும் உறவுமுறைகளுக்கு ஒப்புமையாக இருக்கும்போதுகூட, வேதாகமத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்துதலுக்குப் பின்னால் உள்ள கொள்கைகள் கவனிக்கப்பட வேண்டும்.* உதாரணமாக, உலகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் எஜமானர்/அடிமை உறவுமுறை இப்போது நிலவுவது இல்லை. அதற்குப் பதிலாக, பெரும்பான்மையான மக்கள் தங்களை, வேலை அளிப்பவர்/வேலைக்கு அமர்த்தப்படுபவர் என்ற உறவுமுறையில் இருக்கக் காண்கின்றனர், இது வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்த எஜமானர்/அடிமை உறவுமுறைக்குப் பலவழிகளில் ஒப்புவமையாக உள்ளது. இதன் விளைவாக, எஜமானர்கள் மற்றும் அடிமைகள் ஆகியோருக்கான அறிவுறுத்துதல்கள், இன்றைய நாட்களில்

*வேலை அளிப்பவர்கள் மற்றும் வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் ஆகியோருக்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடும். இருப்பினும், வேதாகமத்தில் தரப்பட்டுள்ள குறிப்பான அறிவுறுத்துதல்கள் நடைமுறைப்படாதவைகளாகக் காணப்படும்போதும், அந்த அறிவுறுத்துதல்களுக்குப் பின்னால் உள்ள கொள்கைகள் - மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துதல், நமது கடைமைகளை நிறைவேற்றுதல் (மற்றும் குறைந்தபட்சம் கேட்டுக்கொள்ளப்படுபவற்றிற்கும் அப்பால் செல்லுதல்) மற்றும் பிறருக்கு நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பானவைகளைச் செய்தல் - ஆகியவை நடைமுறைப்படுபவைகளாகவே உள்ளன.*

*ஒழுக்கரீதியான மற்றும் நடத்தை சார்ந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் மற்றும் வேதாகமரீதியான கொள்கைகளின் மீது நடத்தை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அதிகமாக வலியுறுத்துதல் அரிதாகவே செய்யப்பட முடியும். ஒழுக்க மற்றும் நெறிமுறை விஷயங்களில், விதிகளின் கூற்றுக்களைக் காட்டிலும் கொள்கைகளை செய்தித்தொடர்பு கொள்ளுதலினாலேயே வேதாகமத்தின் வழிநடத்துதல் மிகவும் அடிக்கடி அளிக்கப்படுகிறது என்பதை நாம் உணர்ந்தறிதல் அவசியமாக உள்ளது!*

***தேவனுடைய ஒழுக்க தர அளவை தனித்தனிக் கிறிஸ்தவர்களால் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கங்கொண்டிருந்தது***

*புதிய ஏற்பாட்டின் ஒழுக்க வேண்டுகோள்கள் தனிநபர்களுக்கு உரைக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக யாக்கோபு, "... உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்று கூறினார் (யாக்கோபு 1:27). இதன் விளைவாக, தனித்தனிக் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் அந்த வேண்டுகோள்களின்படி வாழும் பொறுப்பைக் கொண்டுள்ளார்.*

*கிறிஸ்தவர்கள் விசுவாசநிறைவுடன் வாழும்படி ஒருவருக்கொருவர் ஊக்குவிக்கவும் புத்திசொல்லவும் வேண்டும் என்றும் புதிய ஏற்பாடு போதிக்கிறது, மற்றும் அது வெளிப்படையாகப் பாவம் செய்யும் சீஷர்களைக் கையாள்வது எவ்வாறு என்றும் அறிவுறுத்தல்கள் தருகிறது (காண்க யாக்கோபு 5:19, 20; கலாத்தியர் 6:1, 2; மத்தேயு 18:15-17; 1 கொரிந்தியர் 5). இன்னும், நமது சொந்த நடக்கைகளுக்கு நாமே பொறுப்பாகிறோம் மற்றும் தேவனிடத்தில் கடைசியில் நாமே பதில் அளிப்போம்.*

*தேவனுடைய தனித்தனிப் பிள்ளைகளாக இருத்தலில் நாம், நமது சொந்த சூழ்நிலைகளில் நமது ஒழுக்கப் பொறுப்பைத் தீர்மானிக்கும் கடமையையும் சுயாதீனத்தையும் நாம் கொண்டுள்ளோம் என்பதே இந்த உண்மைகளின் குறிப்பிடத்தக்க உட்கருத்தாக உள்ளது. சபையானது தனது உறுப்பினர்களிடத்தில் உள்ள வெளிப்படையான மற்றும் தெளிவான பாவம் பற்றிக் கையாள வேண்டும். பிரசங்கியார்களும் போதகர்களும், குறிப்பிட்ட சபைக்குழுமங்கள் சந்திக்கும் ஒழுக்கரீதியான பிரச்சனைகளில் தேவனுடைய வசனத்தை நடைமுறைப் படுத்த வேண்டும். ஒழுக்க நடத்தைகள் பற்றி வேதாகமம் போதிப்பதற்கு அப்பால் செல்லும்படி எந்த ஒரு மனிதருக்கோ அல்லது மனிதர்களின் குழுவிற்கோ அல்லது சபை முழுவதற்குமோ புதிய ஏற்பாடு எந்த உரிமையும் தருவதில்லை.*

அந்த உண்மை, தனித்தனிக் கிறிஸ்தவர்களுக்கு அர்த்தப்படுத்துவது என்ன? நாம் அழைக்கப் பட்டுள்ள உயர்வான அழைப்பின் தர அளவைகளின்படி வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகச் செய்யும்படி தேவன் நம்மை நமது மதிப்பிற்குரிய இடத்தில் வைத்துள்ளார் (எபேசியர் 4:1). நாம் வாழ்வதற்கான விதிகளைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார், எவரொருவரும் வேதாகமத்தில் காணப்படும் அந்த சட்டங்களுக்கு அப்பால் நம்மைக் கட்டுப்படுத்தும்படி எந்த சட்டங்களையும் ஏற்படுத்த முடியாது. இருப்பினும் நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதைக் கண்டறிய, வேதவசனங்களை ஊக்கமாக ஆராய வேண்டும்; பின்பு நாம் கண்டறிந்த கொள்கைகளின்படி வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.[5]

### தேவனுடைய ஒழுக்கத் தர அளவை அறைகூவல் விடுப்பதாக இருப்பதை நோக்கங்கொண்டிருந்தது

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், நமது அன்றாட வாழ்வில் தேவன் நம்மிடத்தில் கேட்டுக் கொள்வது என்ன என்பதைத் தீர்மானிக்க முழுமையான சுதந்தரம் நமக்கு அளிக்கப்பட்டிருந்தால், சுவிசேஷத்தின் நிபந்தனைகளை நாம் குறைத்து மதிப்படும்படி சாய்ந்திருப்போம். அதாவது, நமது வாழ்விற்கு வேதாகம சத்தியங்களை நடைமுறைப்படுத்துவதில் நமது சொந்த முன்னுரிமைகளை நாம் செயல்படுத்த முடிந்திருந்தால், நமது வாழ்வை நாமே சுலபமானதாக ஏற்படுத்தி இருப்போம்.

வேதாகம போதனைகளை நீர்த்துப்போகச் செய்து, பின்வருவன போன்ற கூற்றுக்களை ஏற்படுத்துதல் என்பது, மக்கள் வேதவசனங்களைத் தவறாக நடைமுறைப்படுத்துவதை நியாயப்படுத்தும் ஒரு வழிமுறையாக உள்ளது:

- "இளம் செல்வந்தரான அதிகாரி தமக்குள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடுக்கும்படி மற்றும் பின்பு வந்து இயேசுவை பின்பற்றும்படி அவரிடத்தில் இயேசு கூறினார் [மத்தேயு 19:16-22], *ஆனால் அவரது அறிவுறுத்துதல்கள் நமக்கு உண்மையில் நடைமுறைப்படுவது இல்லை. இயேசுவைப் பின்பற்றுவதற்கு நாம் ஒவ்வொன்றையும் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை."*
- "நமது நெருங்கிய உறவினர்களை நாம் வெறுக்காவிட்டால் [லூக்கா 14:25-27], நாம் இயேசுவின் சீஷர்களாக இருக்க முடியாது என்று இயேசு கூறினார், *ஆனால் நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பு அவ்வளவு பலமானதாக இருக்க வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை என்பது தெளிவு."*
- "தேவனை நாம் நமது முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அன்புகூர வேண்டும் என்று இயேசு கூறினார் [மத்தேயு 22:37], *ஆனால் நாம் ஓரளவிற்கு மற்றும் நம்மிடத்தில் உள்ளவற்றில் ஓரளவைக் கொண்டு தேவனை அன்புகூர்ந்தால் அது போதுமானது."*
- "ஆதி சீஷர்கள் தங்கள் உடைமைகளை விற்று அதை மற்ற கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொண்டனர் [நடபடிகள் 2:44, 45], ஆனால் *அது நாம் பின்பற்ற வேண்டிய உதாரணமாக இருப்பதில்லை. அதற்குப்*

*பதிலாக நாம் கர்த்தருடைய நாளில் ஒரு அடையாளத் தொகையைக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.*"

- "ஆதி சீஷர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் [நடபடிகள் *8:4*], *ஆனால் அதையே நாம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பது தெளிவு.*"
- "பவுல், இனி வாழ்வது தாம் அல்ல, ஆனால் கிறிஸ்துவே தமக்குள் வாழ்கிறார் என்று கூறினார் [கலாத்தியர் *2:20*], ஆனால் நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு அதேவகையான தீவிர எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டியதில்லை."

இந்த முடிவுகள் சிலவற்றில் சில உண்மைகள் உள்ளன. கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக நாம், நம்மிடத்தில் உள்ள ஒவ்வொன்றையும் விற்று, அவை எல்லாவற்றையுமே ஏழைகளுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று தேவன் நம் எல்லாரிடத்திலும் கேட்பதில்லை என்பது நிச்சயம். நடபடிகள் 2க்குத் தக்க வகையிலான விளக்கம் அளித்தல் மற்றும் அதன் நடைமுறைப் பயன்பாடு என்பது உண்மையில், சாதாரண சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகளை விற்று மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதில்லை என்ற முடிவிற்கே உண்மையில் நம்மை வழிநடத்தும்.

இப்படிப்பட்ட வசனப்பகுதிகள் அர்த்தமற்றவை ஆகும் வகையில் நாம் இவற்றிற்கு விளக்கம் அளிக்கக் கூடாது என்பதே இங்கு பாடமாக உள்ளது. நாம் நம்மிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் கேட்டுக்கொள்வதில்லை என்பதால், நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு எதையுமே விட்டுக்கொடுக்கும்படி அவர் கேட்டுக்கொள்வது இல்லை என்று நாம் முடிவு செய்யலாம். அது ஒரு தவறான முடிவாக இருக்கும்.

மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற வசனப்பகுதிகள், *கிறிஸ்தவர்கள் தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதில் தீவிரமானவர்களாக இருக்க வேண்டும்* என்ற கொள்கையை நிலைநாட்டுகின்றன என்பதே, கிறிஸ்துவின் வேண்டுகோள்களை நீர்த்துப்போகச் செய்யும்படியான சோதனைக்குத் தீர்வாக இருக்கலாம். அந்த ஒப்புக்கொடுதலை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடலாம், ஆனால் அது [ஒப்புக்கொடுத்தல்] எப்போதுமே இருக்க வேண்டும். சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் தேவையில் இருக்கும்போது, நமது பொருட்களை நாம் விற்று மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி சூழ்நிலைகள் உண்மையிலேயே நம்மைக் கேட்டுக்கொள்ளலாம். சில விஷயங்களில், நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிடும்படி கேட்டுக்கொள்ளலாம். வேறு எவரும் நேர்மையாளராக இராதபோது நாம் நேர்மையாளராக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்; விசுவாசத்திற்காக மரிக்கும்படிகூட நம்மிடத்தில் கேட்டுக்கொள்ளப் படலாம். முற்றிலுமான ஒப்புக்கொடுத்தல் என்பது, தேவனைப் பிரியப்படுத்துவதற்காக நம்மிடத்தில் எதைக் கேட்டுக்கொண்டாலும், அவ்வகையான ஒப்புக்கொடுத்தலைக் கொண்டிருக்க நாம் அறைகூவலைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். வேதாகமக் கொள்கைகளை நமது அன்றாட வாழ்விற்கு நடைமுறைப்படுத்தும்போது, சுவிசேஷத்தின் தீவிரமான வேண்டுகோள்களை

*நீர்த்துப் போகச்செய்யாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

## *முடிவுரை*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதைக் கற்றறிய நாம் வேதாகமத்தைக் கண்ணோக்குகிறோம். அன்றாட வாழ்விலும் நாம் எதிர்கொள்ளும் ஒழுக்க மற்றும் நெறிமுறை சார்ந்த விஷயங்களில் தேவனுடைய வசனத்தை நடைமுறைப்படுத்த நாம் முயற்சி செய்கையில், சிரமமான கேள்விகள் எழுவதை நாம் கண்டறியலாம். பின்வருபவற்றைச் செய்வதன் மூலம் நாம் அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியும்: (1) வேதாகமத்தில் தேவனுடைய ஒழுக்க தர அளவை அடங்கியுள்ளது என்பதை உணர்ந்தறிதல்; (2) தேவனுடைய வேண்டுகோள்கள் முற்றான முழுமைகளில் வேர்கொண்டுள்ளதை ஒப்புக்கொள்ளுதல்; (3) தேவனுடைய வசனத்தில் போதிக்கப்பட்டுள்ள ஒழுக்க மற்றும் நெறிமுறை சார்ந்த கொள்கைகளைப் புரிந்துகொள்வதை நாடுதல், சட்டங்களைக் காண நாடுதலுக்கு மாறாக கொள்கைகளைக் காண நாடுதல்; (4) ஒழுக்க மற்றும் நெறிமுறை சார்ந்த கேள்விகளை எதிர்கொள்ளும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்; மற்றும் (5) சுவிசேஷத்தின் அறைகூவல் விடுக்கும் நிபந்தனைகளுக்குப் புறம்பாகச் சென்று விளக்கம் அளிக்க மறுத்தல்.*

*இந்த வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துவதால் நாம், கடைசியில் கர்த்தர், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" (மத்தேயு 25:23அ) என்று கூறும் வகையிலான வாழ்வை வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.*

*குறிப்புகள்*

*[1]"முற்றான முழுமைகள் எதுவும் இல்லை" என்ற முன்மொழிதல் தன்னிலேயே முரண்பாடு உள்ளதாகும், ஏனெனில் அது தன்னிலேயே ஒரு முற்றான முழுமைக் கூற்றாக உள்ளது. [2]ஆதியாகமம் 19:1-26ல் சோதோம் கொமோரா நகரத்தார்களாயும் நியாயாதிபதிகள் 19-21ல் கிபியா என்ற ஊரில் இருந்த பொல்லாத மனிதர்களையும் கூடக் கண்ணோக்குங்கள். புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 6:9, 10; 1 தீமோத்தேயு 1:10 ஆகிய வசனங்களைக் காணுங்கள். [3]அனேகமாக இந்தக் கூற்றில் இன்னமும் அதி கமானவை உள்ளடங்கி இருக்கின்றன. இது, "சபையையும் நாட்டையும் பிரித்துப் பார்த்தல்" என்று அமெரிக்கர்கள் அழைப்பதைக் கருத்தாகத் தெரிவிக்கலாம், மற்றும் இது, "இராயனின் இராஜ்யத்துடன்" போட்டியிடும் பூமிக்குரிய இராஜ்யத்தின் கொள்கைகளை அல்ல, ஆனால் கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் கொள்கைகளையே நிச்சயமாகப் போதிக்கிறது. [4]இன்றைய நாட்களில் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், சீட்டுகளில் செய்யப்படுவது - அது சூதாட்டத்தை உள்ளடக்கி இருந்தாலும் இல்லை என்றாலும் - மற்றும் தாங்கள் காணும் திரைப்படங்களின் வகை என்ன என்பது ஆகியவை இந்த நடவடிக்கைகள் உலகப்பிரகாரமானதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதாக நினைக்கின்றனர். [5]கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறருக்காகச் சட்டங்களை ஏற்படுத்தக் கூடாது; ஆனால் ஒரு கிறிஸ்தவர் தேர்ந்து கொண்டால் தமக்குத்தாமே சட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அவர், "நான் நடன அரங்கிற்கு ஒருக்காலும் செல்ல மாட்டேன்" அல்லது "நான் ஒருக்காலும் சூதாட மாட்டேன்" என்று கூறலாம். மேலும்*